


Metro லீடர்

# மெட்ரோ LEADER

தமிழ் பேசும் மக்கள் 'நமக்கான நாளிதழ்'

CN ceynews
www.ceynews.lk

லீடர்: 03 | இதழ் -257 | 25.01.2023 | பக்கங்கள்: 07 | editorml21@gmail.com | விலை: 50/-

# தேர்தல் எமக்கு சம்மந்தமில்லை

## மத்திய வங்கி ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க தலாலடி!



இந்த நேரத்தில் தேர்தலை நடத்துவது ஏற்புடையதா? இல்லையா? இது மத்திய வங்கியுடன் தொடர்புடைய விடயம் அல்ல என மத்திய வங்கி ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க தெரிவித்திருந்தார்.

இன்று (25) இடம்பெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

தேர்தலை நடத்துவது ஏற்புடையதா? இல்லையா? என்பது பற்றி நாங்கள் கருத்து கூற விரும்பவில்லை. அது எமக்கு சம்மந்தமில்லை. மத்திய வங்கியானது நாட்டின் நிதிக் கொள்கையை நடைமுறைப்படுத்தும் நிறுவனம் என்பது முக்கிய காரணம். தேர்தல் எமது சட்டத்திற்கு புறம்பானது. 02

# மோட்டு சின்னத்திற்கு மக்கள் வழியேயின்றி வாக்களிக்க வேண்டும்

மொட்டு சின்னத்திற்கு வாக்களிப்பதை தவிர மக்களுக்கு மாற்று வழிமுறை ஏதும் கிடையாது என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் காரியாலயத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

யார் நாட்டுக்கு சேவையாற்றினார்கள், யார் நாட்டை சீரழித்தார்கள் என்பதை இருமுறை சிந்தித்து மக்கள் வாக்களிக்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன ஜனநாயகம் 02

# 13 ஐ அமுல்படுத்துவதுதான் தீர்வு என்றால், முஸ்லிம் தலைமைகள் இதில் தீவிர கவனம் செலுத்த வேண்டும்:

*–அமைச்சர் நஸீர் அஹமட்–*



அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்தும் முயற்சிகள் மும்முரமாகியுள்ளதால், இது குறித்து, முஸ்லிம் தலைமைகள் கூடிய கவனம் எடுக்க வேண்டும் என சுற்றாடல் அமைச்சர் நஸீர் அஹமட் தெரிவித்துள்ளார்.

இத்திருத்தம் முழுமையாக அமுல்படுத்தப் படுமானால், முஸ்லிம்கள் சார்பில் மேற்கொள்ள வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டிய பொறுப்பிலிருந்து முஸ்லிம் தலைமைகள் விலகி நிற்கக்கூடாது என்றும் அமைச்சர் நஸீர் கூறினார்.

## நாட்டில் 140 அத்தியாவசிய மருந்துகளுக்கு தட்டுப்பாடு!

புற்றுநோயாளிகளுக்கு வழங்கப்படும் 43 மருந்துகள் உட்பட 140 க்கும் மேற்பட்ட அத்தியாவசிய மருந்துகளுக்கு கடுமையான பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. 02

## 45,000 ரூபாவுக்கு மேல் வருமானம் பெறுவோருக்கு வரி!

### சர்வதேச நாணய நிதியம் பரிந்துரை!

மாதாந்தம் 45,000 ரூபாவுக்கு மேல் வருமானம் பெறுகின்றவர்களுக்கு வரியை அறவிடுமாறு சர்வதேச நாணய நிதியம் இலங்கை அரசாங்கத்துக்கு நிபந்தனை 02

## ஜனாதிபதி தலைமையில் சர்வகட்சி மாநாடு



பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்து கட்சிகளின் தலைவர்கள் கலந்து கொள்ளும் சர்வகட்சிச் மாநாடு நாளை (26) மாலை 4.00 மணிக்கு ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெறவுள்ளது. 02

## எம்.பி ஆகிறார் பௌசி



ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

பகுதி I : தொகுதி (I) - பொது

அரசாங்க அறிவித்தல்கள்



ஏ.எச்.எம். பௌசி ஐக்கிய மக்கள் சக்தி கட்சியின் பாராளுமன்ற உறுப்பினராக பெயரிடப்பட்டு அதி விசேட வர்த்தமானி அறிவித்தல் தேர்தல்கள் ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்டுள்ளது.

## தேர்தல் எமக்கு சம்மந்த...

தேர்தல் ஆணையாளர் எனக்குக் கடிதம் அனுப்பியிருக்கிறார். குறிப்பாக வரிசையில் நிற்கும்போது, அத்தியாவசியப் பொருட்களுக்கு முன்னுரிமை கொடுப்பதுதான் முக்கியம்.

டிசம்பர் முதல் அந்நியச் செலாவணி வரவில் வளர்ச்சி ஏற்பட்டதால், தலையிட்டு அந்நியச் செலாவணியை வழங்குவதற்குப் பதிலாக, எரிபொருள் போன்ற அத்தியாவசியப் பொருட்களுக்குத் தேவையான பணத்தைப் பெற வங்கியிடம் இப்போது இருப்பு இருப்பதாக நாங்கள் கூறியுள்ளோம்.

கிடைக்க முடியாவிட்டால், இருப்பதில் இருந்து கொடுப்போம். அந்த வழியில் தான் இப்போது போகிறோம். இப்போது அந்நியச் செலாவணியைப் பொறுத்தவரை வங்கி அமைப்பில் பெரிய பற்றாக்குறை இல்லை. சந்தையில் பணம் இருக்கிறது.

தேர்தல் IMF செயல்முறையை பாதிக்கிறதா என்று சொல்ல நான் நிபுணர் இல்லை. IMF மூலம் இதுபோன்ற சிக்கலான திட்டத்தை செயல்படுத்தும்போது, கடினமான கொள்கைகள் மற்றும் முடிவுகள் யாராக இருந்தாலும், அது செயல்படுத்தப்பட வேண்டும் என்பதை எங்கள் தரப்பில் இருந்து பார்க்கிறோம்.

இதுபோன்ற பொருளாதார நெருக்கடியிலிருந்து விடுபட, வலிமிகுந்த கொள்கையை நாம் தொடர்ந்து செயல்படுத்த வேண்டும். தற்போதைய செயல்முறை மிகவும் வெற்றிகரமாக உள்ளது மற்றும் முன்னேறியுள்ளது. இது தொடர்ந்து செயல்படுத்தப்படும் என்று நாங்கள் நம்புகிறோம்.

வரிக் கொள்கையானது நிதிக் கொள்கைக்கு உட்பட்டது. மத்திய வங்கி நாட்டின் நிதிக் கொள்கையாக செயல்படுகிறது. அரசின் நிதிக் கொள்கை நாட்டின் நிதிக் கொள்கையுடன் ஒன்றாகச் செல்ல வேண்டும் என்று நாங்கள் நம்புகிறோம். எனத் தெரிவித்திருந்தார்

## நாட்டில் 140 அத்தியாவசிய மருந்துகளுக்கு...

மருந்துப் பற்றாக்குறையால் சுகாதாரப் பணிகள் முடங்கியதுடன், நோயாளிகளும் கடும் சிரமத்துக்கு ஆளாகியுள்ளனர்.

எவ்வாறாயினும் தட்டுப்பாடு உள்ள மருந்துகளை கொள்வனவு செய்ய உத்தரவுகள் வழங்கப்பட்ட போதும் பணம் செலுத்துவதில் சிக்கல்கள் இருப்பதாக சுகாதார அமைச்சின் செயலாளர் ஜனக சந்திரகுப்த தெரிவித்தார்.

இந்தியக் கடன் வரியின் கீழ் முன்பதிவு செய்யப்படும் புற்று நோயாளர்களுக்கு வழங்கப்படும் 43 மருந்துகள் இன்னும் 15 நாட்களில் இலங்கையை வந்தடையும் என்று அவர் குறிப்பிட்டார்.

பற்றாக்குறையாக உள்ள எஞ்சிய மருந்துகளை இறக்குமதி செய்ய தேவையான நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் சுகாதார அமைச்சின் செயலாளர் குறிப்பிட்டார்.

## மொட்டு சின்னத்திற்கு மக்கள் வழியேயின்றி...

மற்றும் மக்களின் அரசியல் அபிலாசைகளுக்கு மதிப்பளித்து செயற்படுகிறது எனவும் சாகர காரியவசம் கூறியுள்ளார்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் பொதுஜன பெரமுன மாறுப்பட்ட பொதுச் சின்னத்தில் போட்டியிடும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன நாட்டுக்கு எதிரான செயற்பாடுகளில் ஈடுபடவில்லை எனவும் அவர் கூறியுள்ளார்.

ஆகவே மக்களுக்கு மாற்று வழியேதும் கிடையாது எனவும் சாகர காரியவசம் தெரிவித்துள்ளார்.

இடம்பெறவுள்ள உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன அமோக வெற்றிப்பெறும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## 45.000 ரூபாவுக்கு மேல் வருமானம்...

விதித்திருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் பந்துல குணவர்தன இந்தத் தகவலை நேற்று நடைபெற்ற அமைச்சரவை தீர்மானங்களை வெளியிடும் செய்தியாளர் சந்திப்பில் வைத்து தெரிவித்தார்.

சர்வதேச நாணயநிதியத்துக்கும் இலங்கைக்கும் இடையிலான ஒப்பந்தம் இன்னும் வெளிப்படுத்தப்படவில்லை.

என்றாலும், கடந்த அமைச்சரவைக் கூட்டத்தில் வைத்து ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இந்த விடயத்தை வெளிப்படுத்தியதாக, அமைச்சர் பந்துல கூறியுள்ளார்.

ஆனால் அரசாங்கம் 100,000 ரூபாவுக்கும் அதிகமான மாத வருமானத்தைப் பெறுகின்றவர்களுக்கு மாத்திரமே வரி விதிப்பு செய்வது என்ற தீர்மானத்திலிருந்து மாறவில்லை என்று அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## 13 ஐ அமுல்படுத்துவதுதான் தீர்வு என்றால்...

இது பற்றி அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கைத் தமிழர்களின் அரசியல் தீர்வு குறித்து அண்மைக்காலமாக, இந்தியா அதிக அக்கறை செலுத்தி வருகிறது. நாட்டின் புரையோடிப் போயுள்ள தேசிய அரசியல் பிரச்சினைக்கு தீர்வைப் பெற்றுக் கொடுக்கும் வகிபாகத்திலிருந்து இந்தியா ஒதுங்கிவிடாது. இந்த வகையில்தான், இந்திய வெளியுறவு அமைச்சரின் வருகையும் அமைந்துள்ளது.

'வடக்கும் கிழக்கும் தமிழர்களின் மாகாணம்'. 'இணைக்கப்பட்ட வடகிழக்கில் காணி, பொலிஸ் அதிகாரங்களை வழங்கல், சமஷ்டிக்கு நிகரான தீர்வுக்கு வித்திடல்' போன்ற நிலைப்பாட்டிலே இந்தியாவுள்ளது.

இந்தியாவின் இந்த நிலைப்பாடுகள், முஸ்லிம்களுக்கு ஏற்படுத்தும் அச்சம் குறித்து இந்திய அரசாங்கத்தை தெளிவுபடுத்துவது முஸ்லிம் தலைமைகளின் பொறுப்பு.

தமிழரின் தாயகம் என்ற வார்த்தைப் பிரயோகம் தமிழ் பேசும் முஸ்லிம்களையும் உள்ளடக்கியதா? அவ்வாறானால், இம்மாகாணங்களிலுள்ள முஸ்லிம்களின் காணிகளுக்கு உத்தரவாதம் என்ன? கடந்த காலங்களில் பறிபோன முஸ்லிம்களின் காணிகளை மீளப் பெறுவது எப்படி? இவற்றை மீள ஒப்படைப்பது யார்? மட்டக்களப்பு மாவட்டத்தில், அதிகாரிகள் மற்றும் அரசியல்வாதிளின் பலவந்தத்தால் பறிக்கப்பட்ட முஸ்லிம்களின் காணிகளை மீள ஒப்படைப்பது யார்?

எல்லைகளைச் சுருக்கி ஒரு குறுகிய நிலப்பரப்புக்குள் முஸ்லிம்களை முடக்கியுள்ள இன ஒடுக்கு முறைகள் இனியும் நடைபெறாது என்பதை எந்தத் தரப்பு உத்தரவாதப்படுத்துவது? விரட்டப்பட்ட முஸ்லிம்களை மீளக் குடியேற்றுவது எப்போது? முஸ்லிம்களின் அழிக்கப்பட்ட சொத்துக்களுக்கு பரிகாரமாக முன்வைக்கப்படும் முன்மொழிவுகள் என்ன? தமிழ் பயங்கரவாதத்தால் பறிக்கப்பட்ட காணிகளைப் பெறுவது எப்படி?

இதுபோன்ற சந்தேகங்களை களைந்தே, அரசியலமைப்பின் 13ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்த வேண்டும்.

தீர்வைக் குலைப்பதோ? அல்லது இழுத்தடிப்பதோ முஸ்லிம்களின் நோக்கம் இல்லை. கடந்த காலங்களில் இந்த ஒப்பந்தம் வடக்கு, கிழக்கு மாகாண முஸ்லிம்களை கைவிட்டிருந்ததுடன், ஓரங்கட்டியும் இருந்தது.

முஸ்லிம்களுக்கு இந்த ஒப்பந்தத்தில், சந்தேகம் ஏற்பட இதுவே காரணம். எனவே, நாட்டின் நிரந்தரத் தீர்வுக்கு 13 ஐ, முழுமையாக அமுல்படுத்துவதுதான் தீர்வாக அமைந்தால், அதையும் ஏற்க முஸ்லிம்கள் தயார்தான்.

ஆனால், இந்திய – இலங்கை ஒப்பந்தத்தால் முஸ்லிம்களுக்கு ஏற்பட்ட அநீதிக்கு நியாயந்தருவது, இதை அமுல்படுத்துகையில் முஸ்லிம்களுக்கு ஏற்படும் தீங்குகளை நீக்குவது, மற்றும் தமிழ் மொழித் தேசியத்துக்குள் முஸ்லிம்களையும் உள்வாங்குவதாகக் கூறி, இடையில் காலைவாரும் சூழ்ச்சிகளை நிறுத்துவது உள்ளிட்ட ஏற்பாடுகளை இந்தியா முன்னெடுக்க வேண்டும்.

இது குறித்து இந்தியாவுக்குத் தெளிவுபடுத்த முஸ்லிம் தலைமைகள் முன்வருவது அவசியம். தமிழ் தேசியத்துக்குள் முஸ்லிம்களையும் உள்வாங்க முனையும் தமிழ் தலைமைகள் இதுபற்றி மனந்திறந்து முஸ்லிம்களுடன் பேசாதுள்ளதுதான் பாரிய சந்தேகத்தை ஏற்படுத்தி உள்ளது.

எனவே, இந்தியாவோ அல்லது வேறெந்த தரப்பினரது முயற்சிகளால் கொண்டுவரப்படும் தீர்வுகள் – முஸ்லிம்களை திருப்திப்படு த்தாது அமைந்தால், அது நிரந்தரத் தீர்வாக அமையாதென்பதை உறுதியுடன் கூறுகிறேன்'' என்றார்.

## ஜனாதிபதி தலைமையில் சர்வ...

ஒருமித்த கருத்தை எட்டுவதும், தேசிய நல்லிணக்கத்தை மேம்படுத்துவதுமே இக்கூட்டத்தின் நோக்கம் என, ஜனாதிபதி ஊடகப் பிரிவு விடுத்துள்ள அறிவித்தலில் தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தலைமையில் நடைபெறும், இந்த சர்வகட்சிக் கூட்டத்தில் சபாநாயகர், பிரதமர், எதிர்க்கட்சித் தலைவர், முன்னாள் ஜனாதிபதிகளான மஹிந்த ராஜபக்ஷ, மைத்திரிபால சிறிசேன, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், தேசிய மக்கள் சக்தி தலைவர் அநுரகுமார திஸாநாயக்க ஆகியோர் உட்பட பாராளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்து கட்சித் தலைவர்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க பதவியேற்ற பின்னர், கடந்த 2022 டிசம்பர் 13 ஆம் திகதி நடத்தப்பட்ட கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்ட தேசிய நல்லிணக்கத்தை மேம்படுத்தும் வேலைத்திட்டம் தொடர்பில் விரிவாக கலந்துரையாடப்பட்டு கட்சித் தலைவர்களின் ஒருமித்த இணக்கப்பாட்டை இக்கூட்டத்தில் எட்ட எதிர்பார்க்கப்படுகின்றது.

# சிலோன் மீடியா போரத்தின் ஏற்பாட்டில் இளையோருக்கான ஊடக செயலமர்வும் சான்றிதழ் வழங்கும் நிகழ்வும்

எஸ்.அஷ்ரப்கான்,
எம்.என்.எம்.அப்றாஸ்,
ஏ.எச்.எம்.ஹாரிஸ், எம்.எம்.ஜபீர்

சிலோன் மீடியா போரத்தின் ஏற்பாட்டில் இளையோருக்கான இருநாள் இலவச ஊடக செயலமர்வு (21) சனிக் கிழமை மாளிகைக்காடு பாவா றோயலி மண்டபத்தில் ஆரம்பமானது.

மாற்றுக் கொள்கைகளுக்கான மத்திய நிலையத்தின் அனுசரணையில் இடம்பெற்ற இச்செயலமர்வில் ஊடகத்துறையில் ஆர்வமுள்ள அம்பாறை மாவட்டத்தை சேர்ந்த தமிழ், முஸ்லிம் இளைஞர்கள், யுவதிகள் மற்றும் மாணவிகள் 40க்கு மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

இச்செயலமர்வில் கட்டுரை எழுதுதல் மோஜோ ஊடகவியல் (Mojo Journalism) ஆகியவை கற்பிக்கப்படுகின்றது.

இச்செயலமர்வு நிகழ்வில் சிலோன் மீடியா போரத்தின் தலைவர் கலாநிதி றியாத் ஏ.மஜீத் அறிமுக உரையாற்றினார்.

மாற்றுக் கொள்கைகளுக்கான மத்திய நிலையத்தின் திட்ட இணைப்பாளர் எம்.பிரதீபன் நிகழ்வு பற்றிய விளக்க உரையாற்றியதுடன் மாற்றுக் கொள்கைகளுக்கான மத்திய நிலையத்தின் பயிற்றுவிப்பாளர் என்.மணிவாணன் பங்குபற்றுனர்களுக்கு சிறப்பாக விரிவுரையாற்றினார்.

இச்செயலமர்வின் இறுதிநாள் செயலமர்வும் கலந்து கொண்டோருக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் (22) ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

இதில் வெளிக்கள பயிற்சிக்காக பயிற்சியாளர்கள் சாய்ந்தமருது கடற்கரை மற்றும் வொலிவேரியன் ஆகிய பிரதேசங்களுக்கு சென்று மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து கேட்டறிந்து அதனை கொண்டு செய்தியாக அறிக்கை செய்தனர்.

மேலும் கலந்து கொண்டோருக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு சிலோன் மீடியா போரத்தின் தலைவர் கலாநிதி றியாத் ஏ.மஜீத் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக சாய்ந்தமருது மழ்ஹருஸ் ஷம்ஸ் மகா வித்தியாலயத்தின் அதிபர் எம்.சீ. றிப்கா அன்ஸார் கலந்து கொண்டார்.


இதில் கௌரவ அதிதிகளாக சாய்ந்தமருது பிரதேச செயலக சமுர்த்தி தலைமைப் பீட முகாமையாளர் ஏ.சீ.ஏ. நஜீம், மாற்றுக் கொள்கைக்கான மத்திய நிலையத்தின் இணைப்பாளர் எம்.பிரதீபன், வளவாளர் என்.மணிவாணன், சமுர்த்தி சமூக அபிவிருத்தி உதவியாளர் யூ.எல்.ஜஃபர், சாய்ந்தமருது பிரதேச சமுர்த்தி சமுதாய அமைப்பின் பொறுப்பான அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.எப்.றிகாஸா ஷர்பீன், சிலோன் மீடியா போரத்தின் பொதுச் செயலாளர் ஏ.எல்.எம்.முஜாஹித், பிரதித் தலைவர் எஸ்.அஷ்ரஃப்கான், உதவிச் செயலாளர் எம்.எம்.ஜபீர், செயற்குழு உறுப்பினர்களான எம்.என்.எம்.அப்ராஸ், ஏ.எச்.எம்.ஹாரீஸ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இச்செயலமர்வில் கலந்து கொண்ட இளைஞர், யுவதிகள் மற்றும் மாணவிகளுக்கு அதிதிகளால் சான்றிதழ் வழங்கி வைக்கப்பட்டது.

இந்நிகழ்வின் வரவேற்புரையினை சிலோன் மீடியா போரத்தின் பிரதித் தலைவர் எஸ்.அஷ்ரஃப்கான் நிகழ்த்தியதுடன் நிகழ்வினை அறிவிப்பாளர் சிறாஜ்டீன் தொகுத்து வழங்கினார்.

















# உயர் அதிகாரிகளை தூண்டி தேர்தலை ஒத்தி வைக்க அரசு முயற்சிக்கின்றது

## பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மகரூப்

உயர் அதிகாரிகளுக்கு பொருளாதார ரீதியில் நெருக்கடிகள் கொடுத்து அவர்களைத் தூண்டி தேர்தலை ஒத்தி வைக்க அரசு முயற்சிக்கின்றது என திருகோணமலை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மகரூப் தெரிவித்தார்.

ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அவர் மேலும் கூறியதாவது:–

கடந்த 6 மாத காலத்தினுள் வாழ்க்கைச் செலவு 300 வீதம் அதிகரித்துள்ளது. எனினும், அரச உத்தியோகத்தர்கள் யாருக்கும் எவ்வித சம்பள அதிகரிப்பும் வழங்கப்படவில்லை. எனவே, இந்தப் பாரிய சுமையை பல சிரமங்களுக்க மத்தியில் அரச ஊழியர்கள் சுமந்து வருகின்றனர்.

இந்நிலையில் முன்னைய வரவு செலவுத்திட்டத்தின் மூலம் பஷில் ராஜபக்ஷ உயர் அதிகாரிகளுக்கு வழங்கப்பட்ட தொலைபேசி கொடுப்பனவில் 25 வீதம் குறைத்தார். எரிபொருள் கொடுப்பனவையும் குறைத்தார்.

இந்தக் குறைப்புகளால் ஏற்பட்ட பாதிப்புகளை சமாளித்துக் கொண்டு காலம் கடத்தும் நிலையில் இந்த உயர் அதிகாரிகளின் சம்பளம் மற்றும் இதர கொடுப்பனவுகளில் இருந்து வரி அறவிடும் திட்டத்தை இந்த அரசாங்கம் தற்போது அமுல் படுத்தப்படவுள்ளது. இதனால் எல்லா உயர் அதிகாரிகளும் பெருமளவு வரி மாதாந்தம் செலுத்த வேண்டியுள்ளது.

இந்நிலையில் அவர்களுக்கு மாதாந்தம் வழங்க வேண்டிய சம்பளத்தையும் உரிய திகதியில் அல்லாமல் பிந்திக் கொடுக்கும் திட்டம் உள்ளதாக தற்போது அசாங்கம் அறிவிக்கின்றது.

இதன் பின்னணி என்ன? அரச உயர் அதிகாரிகளுக்கு தேவையற்ற சிரமங்களை ஏற்படுத்தி அவர்களைத் தூண்டும் சதி முயற்சியை இதன் மூலம் இந்த அரசாங்கம் முன்னெடுக் கின்றது என்பது மிகத் தெளிவாகும். சம்பளத்தில் வரி. இதர கொடுப்பனவுகளில் வரி. பாவிக்கும் அரச வாகனத்துக்கு பெறுமதி மதித்து அதற்கு வரி. வசிக்கும் விடுதிகளுக்கு பெறுமதி மதித்து அதற்கும் வரி. இப்படி அதிகாரிகளின் சட்டைப்பைக்குள் கையை வைத்து அவர்களது வருமானங்களை உறிஞ்சும் செயற்பாடு.

இது உயர் அதிகாரிகளின் தொழிற்சங்கங்களைத் தூண்டி அவர்களை பணிப்பகிஸ்கரிப்பு முயற்சியில் ஈடுபடவைத்து தேர்தல் நடவடிக்கைகளைச் சீர்குலைக்க எடுக்கப்படும் சதி முயற்சியாகும்.

தேர்தலுக்கு முகங்கொடுக்க அஞ்சி குலை நடுக்கத்தில் இருக்கும் அரசாங்கத்தினால் தேர்தலை சட்ட ரீதியாக எவ்வகையிலும் ஒத்தி



வைக்க முடியாது. எனவே, வேறு எவ்வகை யிலாவது ஒத்தி வைக்க வேண்டும் என கங்கனம் கட்டும் இந்த அரசாங்கத்தின் ஒரு வகை சதி முயற்சி இதுவாகும். இவ்வளவு காலம் இல்லாத இந்த புதுமையான வரி முறைமையை அரசாங்கம் இப்போது அமுல்படுத்த துடிக்கும் நோக்கம் என்ன என்பதை அனைவரும் சிந்திக்க வேண்டும்.

சகல அரச உத்தியோகத்தர்களும், பொது மக்களும் இந்த அரசாங்கத்துக்குக்கு சரியான பாடம் கற்பிக்கும் ஒரு தளமாக இந்தத் தேர்தலை அணுக வேண்டும். தமது வாக்குகளைப் பயன்படுத்தி இந்த அரசாங்கத்தை மிக மோசமாக தோல்வியடையச் செய்ய வேண்டும்

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

# ஒலுவில் அல்-ஹம்றா வித்தியாலயத்தில் பணி நயப்பு விழா

**எஸ்.அஷ்ரப்கான்**

ஒலுவில் அல்–ஹம்றா மகா வித்தியாலத்தின் வளர்ச்சியில் பெரும் பங்காற்றிய பல்துறை சார்ந்தோரை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு பாடசாலையில் (19) இடம்பெற்றது.

இச்சிறப்பு விழா ஒலுவில் அல்–ஹம்றா மகா வித்தியாலயத்தில் ஓய்வுபெற்று சென்ற ஆசிரியர்கள் மற்றும் இடமாற்றம் பெற்றுச் சென்ற பிரதி அதிபர்கள் ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்களுக்கான பணி நயப்பு விழா அதிபர் அஷ்–ஷெய்க் யூ.கே.அப்துர் ரஹீம் தலைமையில் பாடசாலை அஷ்ரஃப் ஞாபகார்த்த மண்டபத்தில் நடைபெற்றது.

ஓய்வுபெற்றுச் சென்ற ஆசிரியர்களான ஈ.எல். மன்சூர், எஸ்.எல்.ஜஹ்பர் ஆகியோரும், அதிபர் சேவையிலிருந்து இடமாற்றம் பெற்றுச் சென்ற ஏ.எல்.எப்.டில்ஸா ரோஸ், எம்.ரி.ஸியாத் ஆகியோரும், இடமாற்றம் பெற்றுச்சென்ற ஆசிரியர்களான எம்.வி. முபாரக், ஏ.ஏ.பர்சானா, யு.எல்.ஏ.மஜீத், எம்.ரி. பஸ்லி, எம்.எஸ்.நிஹால் முஹம்மட், எம்.பி.எஸ்.எப். ஸிபா, எஸ்.ஆர்.எம். தஸ்லீம், ஏ.எல்.றுமைஸா, ஏ.எல். தௌபீக், இஸட்.எம். நிலாம் ஆகியோரும், இடமாற்றம் பெற்றுச் சென்ற கல்வி சாரா ஊழியர்களான எஸ்.அபூபக்கர், ஐ.ஏ.ஸிராஜ்,வை.வி. றிஸ்வி, ஏ.எம்.அஸ்ஹர்





ஆகியோரும் நினைவுச் சின்னம் வழங்கி கௌரவிக் கப்பட்டார்கள்.

நிகழ்ச்சிகளை அறிவிப்பாளர், ஆசிரியர் ஜே.வஹாப்தீன் தொகுத்து வழங்கினார்.

## வருடாந்த ஒன்று கூடலும் கௌரவிப்பு நிகழ்வும்





**எஸ்.எம்.எம்.முர்ஷித்.**

ஓட்டமாவடி பிரதேச செயலகத்தின் வருடாந்த ஒன்று கூடலும் இடமாற்றம் பெற்றுச் சென்ற உத்தியோகத்தர்களை கௌரவிக்கும் நிகழ்வும் (22) இடம் பெற்றது.

பிரதேச செயலாளர் வீ.தவராஜா தலைமையில் நலன்புரி சங்கத்தின் ஏற்பாட்டில் ஓட்டமாவடி பிரதேச செயலக புதிய கட்டிடத்தில் நிகழ்வுகள் இடம் பெற்றது.

இதன்போது உத்தியோகத்தர்களுக்கும் அவர்களது பிள்ளைகளுக்குமாக சங்கீத கதிரை, பலூன் உடைத்தல், தேசிக்காய் ஓட்டம், முட்டி உடைத்தல், யோகட் தீர்த்துதல் போன்ற விளையாட்டுக்கள் இடம்பெற்று வெற்றி பெற்றவர்களுக்கு பரிசில்களும் வழங்கி வைக்கப்பட்டதுடன் கடந்த வருடம் ஓட்டமாவடி பிரதேச செயலகத்தில் இருந்து இடமாற்றம் பெற்றுச் சென்ற உத்தியோகத்தர்களும் ஓய்வூதியம் பெற்றுச் சென்றவர்களும் நினைவுச் சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

இந்நிகழ்வுகளில் பிரதேச செயலக உத்தியோகத்தர்களும் அவர்களது குடும்ப உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

## வேன் - பஸ் விபத்து ஒருவர் மரணம் 6 பேர் காயம்

**எச்.எம்.எம்.பர்ஸான்**

வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புனாணை பிரதான வீதியில் நேற்று செவ்வாய்க்கிழமை (24) மாலை இடம்பெற்ற விபத்தில் ஒருவர் மரணமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

புத்தளம் சிலாபம் பகுதியிலிருந்து காத்தான்குடி நோக்கி சென்ற வேனும் கல்முனையிலிருந்து கதுறுவெல நோக்கி பயணித்த பஸ் வண்டியும் நேருக்கு நேர் மோதியதிலே இவ்விபத்து இடம் பெற்றுள்ளதாக பொலிஸாரின் விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது. இவ்விபத்தில் வேன் சாரதி உயிரிழந்துள்ளதுடன், வேனில் பயணித்த ஆறுபேர் காயங்களுக்குள்ளாகி வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இவ்விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை வாழைச்சேனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# முஸ்லிம் பெரும்பான்மை சபைகள் அனைத்தையும் மு.கா. கைப்பற்றும்

## பிரதிப் பொருளாளர் யஹியாகான் உறுதி

செயிட் அஸ்லம்

கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழும் அனைத்து உள்ளூராட்சி சபைகளையும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸே கைப்பற்றும் என அக்கட்சியின் பிரதிப் பொருளாளர் ஏ.சி.யஹியாகான் தெரிவித்துள்ளார்.

வேட்புமனுத்தாக்கல் நிறைவுற்ற நிலையில், அவர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் மேலும் கூறியதாவது

உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் திட்டமிட்டபடி நடைபெறுமாயின் மு.கா.வின் அபரிதமான வெற்றி தவிர்க்க முடியாத ஒன்றாக மாறும்.

முஸ்லிம் காங்கிரஸ் எமது தாய்க் கட்சி, அந்தக் கட்சி மட்டும்தான் முஸ்லிம்களின் கட்சி என்பதை உணர்ந்த பலர் இன்று கட்சியோடு மீளிணைந்து வருகின்றனர். மு.கா தலைவர் ரவூப் ஹக்கீம் பல விட்டுக்கொடுப்புக்களுடன் கட்சியை பலப்படுத்தி வருகின்றார்.

கல்முனை மாநகர சபை தேர்தல் விடயம் நீதிமன்றம் வரை சென்றுள்ளதால், இப்பகுதி மு.கா. போராளிகள் மாவட்டத்தின் ஏனைய சபைகளுக்கான தேர்தல் விடயத்தில் கரிசனையோடு செயற்படுவார்கள் என்ற நம்பிக்கை உண்டு.

முஸ்லிம்களின் கட்சி என்று தம்மைத்தாமே மார்தட்டிக் கொள்ளும் ஓரிரு கட்சிகள் இன்றைய சூழ்நிலையில் வலுவிழந்து உட்பூசல் அதிகரித்து, வேட்பாளர் இன்றி திணறிக் கொண்டிருக்கின்றன.

இந்த நிலையில் அக்கட்சிகள் மீது, அக்கட்சிகளின் ஆதரவாளர்களே அதிருப்தியடைந்த நிலையில் காணப்படுகின்றனர்.

இவ்வாறான நிலையில் மு.கா மட்டுமே பூரணமாக வேட்பாளர்களை நியமித்து வேட்புமனுக்களையும் தாக்கல் செய்துள்ளது.

எனவே உள்ளூராட்சி சபைத் தேர்தலில் அம்பாறை மாவட்டத்தில் உள்ள அனைத்து முஸ்லிம் பெரும்பான்மை சபைகளையும்



கைப்பற்றுவது மட்டுமன்றி மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை மாவட்டங்களிலும் இச்சாதனை நிலை நாட்டப்படும் என்பதை உறுதிப்படுத்துகிறேன்– என்றும் யஹியாகான் மேலும் தெரிவித்துள்ளார்.

# மாணவர்களுக்கான போஷனை திட்டம் முன்னெடுப்பு: தென்கிழக்கு பல்கலைக்கழகத்துடன் கலந்துரையாடல்

நூருல் ஹுதா உமர்

நாட்டில் தற்போது நிலவும் பொருளாதார நெருக்கடியினால் மாணவர்கள் போஷாக்கு தொடர்பான பிரச்சினைகளை எதிர்கொள்ளும் நிலைமை தோன்றலாம் என்ற அடிப்படையில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை மாணவர்களின் போஷனை தொடர்பான செயற்றிட்டத்தை தேசிய ரீதியாக முன்னெடுப்பதற்கான பிரேரணை ஒன்றை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கையளித்திருந்தது.
அதன் தொடர்ச்சியான செயல்பாடுகளின் ஒரு அங்கமாக கல்முனை பிராந்திய ஆயுர்வேத பொறுப்பு வைத்திய அதிகாரி எம்.ஏ. நபீலினால் மாணவர்களுக்கான போஷனை திட்டத்தை முன்னெடுப்பதற்கு இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகத்துடன் கலந்துரையாடல் ஒன்று ஒருங்கிணைப்பு செய்யப்பட்டது.



தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் தகவல் தொழில்நுட்ப பீடாதிபதி யூ. எல். அப்துல் மஜீத் தலைமையிலான துறைசார் நிபுணர்கள் மற்றும் விரிவுரையாளர்களும் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஐ.எல்.எம் ரிபாஸ் தலைமையில் பிரதிப் பணிப்பாளர் வைத்தியர் எம். பி.ஏ. வாஜித், வைத்தியர் டீ.எஸ்.ஆர்.டீ ரஜப், சுகாதார தகவல் முகாமைத்துவ பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி வைத்தியர் ஐ.எம் முஜீப், உயிரியல் மருத்துவப் பொறியியலாளர் இஹ்பாம், ஆயுர்வேத உற்பத்தி பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி மற்றும் ஏனைய ஆயுர்வேத பொறுப்பு வைத்திய அதிகாரிகளும் இந்நிகழ்வில் பங்கு பற்றியிருந்தார்கள். இக்கலந்துரையாடலின் போது துறைசார் நிபுணர்களின் நிபுணத்துவத்தின் ஊடாக தற்போது தயாரிக்கப்பட்டு வருகின்ற போஷனை மிகுந்த பிஸ்கட்டுகள் மற்றும் போசனை தூள்கள் என்பவற்றை மேலும் நவீனத்துவப்படுத்தி அதனை சந்தைப்படுத்துவதற்கும் விநியோகிப்பதற்குமான மேலதிக பயிற்சிகளை பெறுவதற்கும் இக்கலந்து ரையாடலின் போது தீர்மானிக்கப்பட்டுள்ளது

## ஏறாவூர் நகர சபையின் புதிய தவிசாளராக சுபைர் குலுக்கல் மூலம் தெரிவு



எம்.ஜி.நாஸர்

ஏறாவூர் நகர சபையின் புதிய தவிசாளராக எம்.எஸ்.எம். சுபைர் திருவுளச்சீட்டு குலுக்கல் மூலமாகத் நேற்று (24) தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இச்சபையின் மூன்றாவது தவிசாளர் இவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இச்சபையின் தவிசாளராக இருந்த எம்.எஸ். நழீம் கடந்த மாதம் சபையில் சமர்ப்பிக்கப்பட்ட இவ்வாண்டிற்கான வரவுத் திட்டம் தோற்கடிக்கப்பட்ட நிலையில் பதவியிழந்தார்.

இதையடுத்து உள்ளூராட்சி ஆணையாளர் என். மணிவண்ணன் தலைமையில் புதிய தவிசாளர் தெரிவு நடைபெற்றது.

இதன்போது எம்.எஸ்.எம். சுபைர் மற்றும் கே. இப்திகார் ஆகியோர் தவிசாளர் பதவிக்காக உறுப்பினர்களினால் முன்மொழியப்பட்டனர். இம்முன்மொழிவு திறந்த வாக்கெடுப்பிற்கு விடப்பட்டபோது இருவருக்கும் தலா எட்டு வாக்குகள் பெறப்பட்டதனால் திருவுளச்சீட்டு குலுக்கல் செய்த நிலையில் முகமட் சரீப் முகமட் சுபைர் தவிசாராகத் தெரிவு செய்யப்பட்டதாக சபையின் செயலாளர் எம்.எச்.எம். ஹமீம் தெரிவித்தார்.

புதிய தவிசாளர் தனது பெயர் அறிவிக்கப் பட்டதையடுத்து நிலத்தில் சிரம் தாழ்த்தி இறைவனுக்கு நன்றி செலுத்திய பின்னர் தவிசாளர் ஆசனத்தில் அமர்ந்தார்.

நாவன்மை கொண்ட இவர் கிழக்கு மாகாண சபையின் அமைச்சராக மற்றும் தவிசாளராகவும் கடமையாற்றியுள்ளார். உள்ளூராட்சி உதவி ஆணையாளர் எஸ். பிரகாஸ் இங்கு பிரசன்னமாயிருந்தார். ஏறாவூர் நகர சபையில் அங்கம் வகிக்கும் 17 உறுப்பினர்களில் 16 பேர் மாத்திரமே நேற்று சபைக்கு சமூகமளித்திருந்தனர்.

ஒரேகட்சியைச் சேர்ந்தவர்கள் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் இரு அணியாகப் போட்டியிட்டதன் விளைவாகவே இச்சபையை சுமுகமாக நடாத்திச் செல்ல முடியாத துரதிஸ்ட நிலை காணப்படுவதாக புதிய தவிசாளர் சுபைர் தனது கன்னியுரையில் சுட்டிக்காட்டினார்.

# திருகோணமலையில் கட்டுப்பணம் செலுத்திய மக்கள் காங்கிரஸ்

ஹஸ்பர்

நடைபெறவுள்ள உள்ளூராட்சிமன்ற தேர்தலுக்கான கட்டுப்பணத்தை திருகோணமலை மாவட்டத்தில் போட்டியிடுவதற்காக அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்டுப்பணத்தை (18) திருகோணமலை மாவட்ட தேர்தல் அலுவலகத்தில் செலுத்தியது.

திருகோணமலை மாவட்டத்தில் 13 உள்ளூராட்சி மன்றங்களிலும் போட்டியிடுவதற்காக மக்கள் காங்கிரஸின் தேசிய அமைப்பாளரும் முன்னால் பிரதியமைச்சருமான அப்துல்லா மஹ்ரூப் தலைமையில் குறித்த கட்டுப்பணம் செலுத்தப்பட்டது.

இதன்போது ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த மக்கள் காங்கிரசின் தேசிய அமைப்பாளரும் முன்னால் பிரதியமைச்சருமான அப்துல்லா மஹ்ரூப், திருமலை மாவட்டத்தில் 13 சபைகளிலும் மக்கள் காங்கிரஸ் போட்டியிடவுள்ளது. கடந்த நான்கு வருட காலமாக பொதுஜன பெரமுன, ஐக்கிய மக்கள் சக்தி, முஸ்லிம் காங்கிரஸ் போன்ற கட்சிகளை சபைகளை ஆட்சி செய்தது. எமது கட்சி ஆட்சி செய்யவில்லை இதன் மூலம் ஊழலற்ற சபை நடவடிக்கையால் பட்ஜட்கள் மூன்று இரண்டு தடவைகள் என தோற்கடிக்கப்பட்டு மக்கள் மத்தியில் அதிருப்தி ஏற்பட்டது. இது போல இம்முறை முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழும் கிண்ணியா நகர பிரதேச சபைகள், மூதூர் குச்சவெளி தம்பலகாமம் ஆகிய ஐந்து சபைகளை மக்கள் காங்கிரஸ் ஆட்சி செய்யும் என்பதுடன் கிழக்கு மாகாணத்தில் பெரும்பாலும் பல சபைகளில் மயில் சின்னத்தில் போட்டியிடுகிறோம் மக்களின் வாக்களிப்பு மூலமாக பெரும்பான்மையான சபைகளை கைப்பற்றுவதுடன் நிசாட் பதியுதீனை பழிவாங்கிய ராஜபக்ஷக்களுக்கு இந்த தேர்தல் மூலம் மக்கள் நல்லதொரு பாடம் புகட்டுவர் என்பதையும் கூறிக்கொள்கிறேன் என்றார்.



# அபிவிருத்தி உத்தியோகத்தர் றிகாஸா ஷர்பீன் முன்னெடுப்பில் சமுர்த்தி உதவி பெறும் பாடசாலை மாணவிகளுக்கு ஊடகச் செயலமர்வு






சாய்ந்தமருது பிரதேச செயலக சமுர்த்தி பிரதேச அடிப்படை அமைப்பின் விடய அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.எப்.றிகாஸா ஷர்பீன் முன்னெடுப்பில் "பெண்களை ஊடகத்துறையில் வலுப்படுத்தல்" திட்டத்தினூடாக சமுர்த்தி உதவி பெறும் குடும்பங்களிலுள்ள பாடசாலை மாணவிகளுக்கு இருநாள் ஊடக செயலமர்வும் சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் (22) ஞாயிற்றுக்கிழமை சிலோன் மீடியா போரத்தின் அனுசரணையில் மாளிகைக்காடு பாவா றோயலி மண்டபத்தில் நடைபெற்றது.நவீன ஊடகத்துறையில் பெண்களின் வகிபாகம் அவசியமானது என்பதை உணர்ந்து பாடசாலை மாணவிகளுக்கு நன்கு ஊடகக் கல்வியை வழங்கி ஊடகத்துறைக்குள் அறிமுகம் செய்து வைக்கும் முகமாக அபிவிருத்தி உத்தியோகத்தர் றிகாஸா ஷர்பீன், சிலோன் மீடியா போரத்திடம் முன்வைத்த கோரிக்கை அமைவாக சமுர்த்தி உதவி பெறும் குடும்பங்களிலுள்ள பாடசாலை மாணவிகளுக்கு இருநாள் ஊடக செயலமர்வுக்கு வாய்ப்பு வழங்கப்பட்டது.

குறித்த ஊடக செயலமர்வுக்கு சாய்ந்தமருது மழ்ஹருஸ் ஷம்ஸ் மகா வித்தியாலயத்தின் 7 மாணவிகள் கலந்து கொண்டு இருநாள் செயலமர்வை வெற்றிகரமாக பூர்த்தி செய்ததுடன் அவர்களுக்கான சான்றிதழ்களும் வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில் சாய்ந்தமருது பிரதேச செயலக சமுர்த்தி பிரதேச அடிப்படை அமைப்பின் விடய அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.எப்.றிகாஸா ஷர்பீனின் சிந்தனையில் தோன்றிய "பெண்களை ஊடகத்துறையில் வலுப்படுத்தல்" திட்டத்தினூடாக சமுர்த்தி உதவி பெறும் குடும்பங்க ளிலுள்ள பாடசாலை மாணவிகளையும் ஊடகத்துறைக்குள் உள்வாங்கும் அவரது சிந்தனையையும் முயற்சியையும் பாராட்டி சிலோன் மீடியா போரத்தின் பிரதிநிதிகள் உள்ளிட்ட அதிதிகளால் பாராட்டுச் சான்றிதழ் வழங்கி கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# சிலோன் மீடியா போரத்தினால் அதிபர் றிப்கா அன்ஸார் கௌரவிப்பு

சிலோன் மீடியா போரத்தினால் சாய்ந்தமருது மழ்ஹருஸ் ஷம்ஸ் மகா வித்தியாலயத்தின் புதிய அதிபராக அண்மையில் நியமிக்கப்பட்ட அதிபர் எம்.சீ. றிப்கா அன்ஸார் கௌரவிக்கப்பட்டார்.

சிலோன் மீடியா போரத்தின் ஏற்பாட்டில் இளையோருக்கான இருநாள் ஊடக செயலமர்வின் இறுதிநாள் செயலமர்வும் கலந்து கொண்டோருக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் (22) ஞாயிற்றுக்கிழமை மாளிகைக்காடு பாவா றோயலி மண்டபத்தில் நடைபெற்றது.

சிலோன் மீடியா போரத்தின் தலைவர் கலாநிதி றியாத் ஏ.மஜீத் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் வைத்தே மழ்ஹருஸ் ஷம்ஸ் மகா வித்தியாலயத்தின் அதிபர் எம்.சீ. றிப்கா அன்ஸார் அன்பளிப்பு வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

இந்நிகழ்வில் சாய்ந்தமருது பிரதேச செயலக சமுர்த்தி தலைமைப் பீட முகாமை யாளர் ஏ.சீ.ஏ. நஜீம், மாற்றுக் கொள்கைக்கான மத்திய நிலையத்தின் இணைப்பாளர் எம்.பிரதீபன், வளவாளர் என்.மணிவாணன், சமுர்த்தி சமூக அபிவிருத்தி உதவியாளர் யூ.எல்.ஜ.்.பர், சாய்ந்தமருது பிரதேச சமுர்த்தி சமுதாய அமைப்பின் விடய அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.எப்.றிகாஸா ஷர்பீன், சிலோன் மீடியா போரத்தின் பொதுச் செயலாளர் ஏ.எல்.எம். முஜாஹித், பிரதித் தலைவர் எஸ்.அஷ்ர.்.ப்கான், உதவிச் செயலாளர் எம்.எம்.ஜபீர், செயற்குழு உறுப்பினர்களான எம்.என்.எம்.அப்ராஸ், ஏ.எச்.எம்.ஹாரீஸ் ஆகியோர் கலந்து கொண்டனர்.






# மத்தியஸ்தமும் இளைய தலைமுறையும்

**மத்தியஸ்தம் என்றால் என்ன?**

“மத்தியஸ்தம்“ என்ற சொல்லின் நேரடிப் பொருள் ஒரு உடன்பாட்டிற்கு வருவது என்பதாகும். பழங்காலத்திலிருந்தே பிணக்குகளுக்குத் தீர்வு காணும் முறை பின்பற்றப்பட்டு வந்ததற்கான ஆதாரங்களை வரலாறு சான்று பகிர்கின்றது. பிணக்குகளை உரையாடல் மூலம் தீர்த்து வைப்பதே மத்தியஸ்தத்தின் முக்கிய நோக்கமாகும். இதில் பங்குபெறும் மதியஸ்தர்கள் பக்கச்சார்பற்றவர்கள், அவர்கள் எந்தத் தரப்பினருக்கும் சார்பானவர்கள் அல்ல. மேலும், எந்தவொரு பிணக்குத் தொடர்பாகவும் அவர்கள் முன்கூட்டியே முடிவுகளைத் தீர்மானிப்பதில்லை. ஏனெனில் அவ்வாறான முடிவுகள் சமூகத்தில் பிரச்சினைகளை உண்டாக்க வாய்ப்புள்ளது. மத்தியஸ்த சபைகள் அதிகாரிகள், அதிகார மேலாதிக்கம் இல்லாமல் மனிதாபிமானமாக நடப்பவர்கள்.

**மோதலுக்கான மூலக் காரணத்திற்கும் இளைய தலைமுறையினருக்கும் இடையிலான தொடர்பு:**

இளைய சந்ததியினருக்கு “பிணக்குகள்“ பற்றிய விழிப்புணர்வு என்பது தற்போதைய சமூகத்தில் வாழ்வதற்கும் மிகவும் அவசியமான ஒன்று. சமூகம் பெரும்பாலும் ஒரு பிணக்கினை இரு தரப்பினருக்கு இடையில் இடம்பெறும் தர்க்கமாகவே அடையாளம் காட்டுகின்றது. ஆனால் பிணக்கு என்ற சொல் பரந்த கருத்தினைக் கொண்டது. இளம் தலைமுறையினர் பிணக்கின் தன்மையைப் புரிந்துகொள்வதில் ‘வேறுபாடு’ என்ற காரணியைக் கருத்தில் கொள்வது அவசியமாகும். பிணக்கு என்பது வேறுபாட்டை அடிப்படையாகக் கொண்டு உருவாகும் ஒன்று. நாம் வாழும் சூழலில் உள்ள மனிதர்களும் அவர்களின் சமூக நிலைகளும் ஆளுக்காள் வேறுபட்டவை. அந்த வேறுபாடு தனித்தன்மை என்று அழைக்கப்படுகின்றது, பிறப்பிலான இயல்புகளும் வாழும் சூழலும் அவ் வேறுபாட்டை ஏற்படுத்துகின்றது. மரபுரிமையாக தொடர்ந்து வரும் பிறவிப் பண்புகள் தொடர்ந்து காணப்பட்டாலும் கூட, சுற்றுச்சூழல் காரணியைப் பொறுத்து தனிமனிதன் பல்வேறு மாற்றங்களுக்கு உள்ளாகின்றான்.

சுற்றுச்சூழல் காரணிகளால் மட்டுமல்லாமல், கல்வி, அனுபவம், மதம் மற்றும் கலாச்சாரம் ஆகியவற்றின் அடிப்படையிலும் தனிமனிதன் ஒருவன் மாற்றமடைகின்றான்.

கல்வியின் முக்கியக் குறிக்கோள் மற்றும் உணர்வு சார்ந்த நிர்வாகம்:

தொழில் ஒன்றைப் பெற்று வாழ்வை நிலைநிறுத்துவதை மட்டுமே குறிக்கோளாகக் கொண்ட இலங்கையின் கல்வித் துறையில், கல்வியின் அத்தியாவசிய அடிப்படைப் பணிகளின் அளவு மிகவும் அரிதாகவே உள்ளன. அதுதான் மன உணர்வுகளை நிர்வகித்தல். எதிர்காலத்தில் பொறியாளர், மருத்துவர், போன்ற தொழில்முறை நிபுணத்துவம் வாய்ந்த இலக்குகளை மட்டுமே கொண்ட சமூகத்தில், ஒரே கட்டமைப்பில் சிக்கி வாழ வேண்டிய நிலை காரணமாக இளம் தலைமுறையினரின் சமூக ஆளுமை மழுங்கடிக்கப்படுகின்றது. மேலும், பாடசாலைக் காலத்திலேயே துன்பம், வலி, மகிழ்ச்சி, உற்சாகம், கோபம் போன்ற எந்த ஒரு உணர்வுபூர்வமான சூழ்நிலையையும் சரியாக நிர்வகிப்பது எப்படி என்பதைக் கற்பிப்பதன் மூலம், பல்கலைக்கழக மட்டத்தில் இருந்து வாழ்நாள் முழுவதும் பிணக்குகளை எதிர்கொண்டு அவற்றை வினைத்திறனாக நிர்வகிப்பதற்கு இது பெரும் உதவியாக அமையும். இன்றைய காலகட்டத்தினை நோக்கும்போது பல்கலைக்கழக மட்டத்தில் இருந்தும் கூட ஒரு பிணக்கினை நிர்வகிப்பதில் இளைய தலைமுறையினர் நடந்துகொள்ளும் விதம் மிகவும் வருத்தமளிக்கின்றது. சொந்தப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குப் பதிலாக மற்றவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் இளைஞர்களின் உணர்வு ரீதியான பலவீனமான நிர்வாகம் எதற்கும் பயன்படாத ஒன்றாகவே உள்ளது.

**இளைய தலைமுறையினராகிய, உங்களால் பன்முகத் தன்மை யை ஏற்றுக்கொள்ள முடியுமா?**

பன்முகத்தன்மையை முதலில் எதிர்கொள்ளும் இடமாக பாடசாலையைக் கருதலாம். எந்தவொரு எதிர்கால சூழலிலும் பன்முகத்தன்மையை பொறுத்துக் கொள்ளக்கூடிய ஒரு ஒழுக்கமான தனிநபரை பாடசாலை மூலம் உருவாக்க முடியும். பிறருடைய துக்கம், வேதனை, வலி, சந்தோசம், போன்றவற்றை தன்னுடைய துக்கம், வேதனை, வலி, சந்தோஷம் போல உணரும் “அனுதாபம்“ உள்ளவர் சமுதாயத்தில் பிணக்குகள் இல்லாமல் வாழ முடியும். பெரும்பாலும், தவறான அணுகுமுறைகள், தவறான தகவல் கள் மற்றும் மற்றவரைப் பற்றிய தவறான கருத்துக்கள் போன்றவற்றால் ஒரு பிணக்கு நீண்டகாலமாகவும், வெறுப்பாகவும் மாற்றமடைகின்றது. குறிப்பிட்ட சம்பவத்துடன், தொடர்பு டைய நபருடன் வெறுப்பு அதிகரிப்ப தால் பிணக்கு மேலும் தீவிரமடை கின்றது.

**இளைய தலைமுறையினராகிய உங்களை “மத்தியஸ்தம்“ செய்வதற்கு அவர்கள் எவ்வளவு தூரம் பொருத்தமானவர்கள்?**

இலங்கையில் தற்போது 329 மத்தியஸ்த சபைகள் குழாம்கள் செயற்படுகின்றன. ஒவ்வொரு பிரதேச செயலகத்திலும் மத்தியஸ்த சபைகள் குழாம்கள் நிறுவப்பட்டுள்ளதுடன், மத்தியஸ்த சபைக் குழாம்களின் குறைந்தபட்ச உறுப்பினர்களின் எண்ணிக்கை 12 ஆகும். ஒவ்வொரு மத்தியஸ்தரும் நேர்காணல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டு, மத்தியஸ்தம் மற்றும் தகவல் தொடர்பாடல் நுட்பங்கள் குறித்த 40 மணி நேரப் பயிற்சியை பூர்த்திசெய்து. அதன் பிறகு, ஒரு மணி நேரத் தேர்வில் அவர்களின் மதிப்பெண்களின் அடிப்படையில் மத்தியஸ்தர்களாகத் தேர்வு செய்யப்படுகின்றார்கள். மத்தியஸ்த சபைகளின் மூலம் எந்த வயதிலும் உள்ள இளைஞர்கள் தங்கள் பிணக்குகளைத் தீர்க்க முடியும்.

**மத்தியஸ்தம் பற்றி இளைய தலைமுறையினர் தெரிந்து கொள்ள வேண்டியது என்ன?**

முதலில் மத்தியஸ்த செயற்பாட்டில், பிணக்குடன் தொடர்புடைய மற்ற தரப்பினரை எதிரியாகக் கருதக்கூடாது. மத்தியஸ்த செயற்பாட்டில், உங்கள் பிணக்கினைத் தீர்க்க சிறந்த நபர் உங்கள் எதிரி என்று நீங்கள் கருதும் நபர் என்று நினைக்க நீங்கள் பயிற்றுவிக்கப்படுகிறீர்கள். இது தொடர்பாடல் செயற்பாடுகளை மேலும் வெற்றிகரமாக்குகின்றது.

**பாடசாலையில் மத்தியஸ்த செயற்பாடுகளை நிறுவுதல்:**

பாடசாலைகள் மற்றும் பல்கலைக்கழகங்களில் மத்தியஸ்தம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவது இன்றைய காலகட்டத்தில் அவசியமான ஒன்றாகும். அதன் அடிப்படையில், மத்தியஸ்த சபைகள் ஆணைக்குழு மற்றும் நீதி அமைச்சும் ஒன்றிணைந்து ஒரு திட்டத்தினை ஆரம்பித்து, 2004 முதல் பிரிட்டிஷ் கவுன்சிலுடன் இணைந்து பாடசாலைகளில் மத்தியஸ்த சபைப் பிரிவுகளை நிறுவுவதற்கான திட்டத்தை செயற்படுத்தி வருகின்றது. அடிப்படையில், இங்கு என்ன செயற்பாடு நடக்கின்றது என்றால், பாடசாலை மாணவர்களிடையே தேர்ந்தெடுக்கப்பட்ட பிணக்குகள் பாடசாலையில் நிறுவப்பட்ட மூத்த மாணவர்களைக் கொண்ட பாடசாலை சமரசப் பிரிவுக்கு அனுப்பப்படுகின்றன. அதற்காக 25 மாணவர்கள் மற்றும் ஐந்து ஆசிரியர்கள் அடங்கிய மத்தியஸ்த பிரிவு பாடசாலையில் நிறுவப்படும். அங்கு, மத்தியஸ்தச் செயற்பாட்டில் பங்குபெறும் மூத்த மாணவர்கள் ஒரு பிணக்கினைத் தீர்க்க மத்தியஸ்தம் செய்கின்றார்கள். தற்போதைய சூழ்நிலையில் பாடசாலைகளில் மட்டும் அல்ல, பல்கலைகழக அளவிலும் மத்தியஸ்த செயற்பாட்டினை அமுல்படுத்த வேண்டிய தேவை எழுந்துள்ளது.




பல்கலைக்கழகங்களில் பாட அறிவுக்கு மேலதிகமாக சமூக அறிவைக் கொண்ட ஒரு சரியான குழுவை உருவாக்குவது ஒரு சமூகப் பொறுப்பாகும். சுற்றியுள்ள சூழலைப் புரிந்துகொண்டு, உலகின் உயர்தர இசையைக் கேட்கும், ரசிக்கும் திறனும், நல்ல இலக்கிய அறிவும் கொண்ட ஒரு பிரிவு சமூகமயமாக்கப்பட வேண்டும்.

**இளைய தலைமுறையினராகிய உங்கள் பிணக்குகளின் ரகசியத் தன்மையை சிறந்த வகையில் பாதுகாக்கும் அமைப்பு!:**

மத்தியஸ்த சபைகளின் முதன்மையான கடமை நீங்கள் முன்வைக்கும் பிணக்குகளின் இரகசியத் தன்மையைப் பேணுவதாகும். காதல் உறவு தொடர்பான பிணக்காக இருந்தாலும் அல்லது வேறு ஏதேனும் பிணக்காக இருந்தாலும் பெரியவர்களுடன் சுதந்திரமாக விவாதிக்க இங்கே வாய்ப்பு அளிக்கப்படும். அதன் பின்னர் அவர்கள் பிணக்கினைத் தீர்க்க தேவையான, சரியான வழிகாட்டுதலை வழங்குவார்கள். மத்தியஸ்தத்தில், சொந்த பிரச்சினையை தொடர்புடைய தரப்பினரின் விருப்பின்படி கையாளவும், விரும்பியபடி வாய்ப்பு வழங்கப்படும்.

மத்தியஸ்த சபைகள், தற்கால இளைஞர்கள் தங்கள் பிணக்குகளை பயமின்றி எடுத்துச் செல்வதற்கான சிறந்த இடம், அங்கு அவர்கள் தங்கள் பிணக்குகளை ஒரு விவாத அடிப்படையில் சரியான வழிகாட்டுதல்களைப் பெற்றுக்கொள்ள முடியும். நாட்டின் எதிர்காலத்திற்காக இளைய தலைமுறையினரின் கருத்துக்களை கேட்க மத்தியஸ்த சபைகள் எப்பொழுதும் கடமைப்பட்டுள்ளது என்பதைக் கூற வேண்டிய அவசியமில்லை.

